**தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்றிட்டம் - 2021**

தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்றிட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆம் திகதிய எல் 0124 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஐ ஆ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பௌதீக ரீதியான தணிப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் மண்சரிவுகளால் ஏற்படும் இடர் மற்றும் சேதத்தை குறைத்து மண்சரிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் பிரமாணங்களை மேம்படுத்துதல் இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,976 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியனானதுடன் அதில் ரூபா 14,528 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நிதி முகாமைத்துவ கையேட்டின் ஏஜஜ ஆம் அத்தியாயம் | வரிசை அமைச்சிற்காக நேரடியாக அறிக்கையளிப்பதற்கு பிஎம்யூ இற்காக தனியான உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். எனினும் கணக்காய்வு நடாத்தப்பட்ட திகதியான 2022 மார்ச் 03 வரையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | தனியான உள்ளக கணக்காய்வு ஆட்சேர்ப்பிற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்திடமிருந்து இன்றைய திகதி வரை செயற்திட்டத்திற்காக பதவியணி அங்கீகாரம் இல்லை. | செயற்திட்டத்தின் நிதிக்கட்டுப்பாடுகளை பலப்படுத்துவதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01.∴2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வழிகாட்டல் குழு கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 01 வழிகாட்டல் குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | பல்வேறு காரணங்களினால் சுற்றறிக்கையின் பிரகாரம் வழிகாட்டல் குழு கூட்டத்தை நடாத்துவதற்கு செயற்திட்டம் தவறியது. | சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பின்வரும் பெயர்களிலான 04 கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

(அ) தணிப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்
(ஆ) கொள்கை, நியமங்கள் மற்றும் நிறுவகரீதியான இயலளவை மேம்படுத்துதல்
(இ) அத்தியாவசிய வசதிகளை வழங்குதல் மற்றும்
(ஈ) உபகரணம் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம்

பெறப்பட்ட தகவலின் படி நாளதுவரையாக அமுலாக்கத் திட்டமானது செயற்திட்டத்தின் இறுதித் திகதிக்கு முன்பாக செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாது என்பதனைக் குறிக்கின்றது. இதன்மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கூறு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| ----- | --------- | ---------------------- | --------------------------------- | ---------------------------- |
| (அ) | கூறு - 01 | | | |
| | (ை) | அனைத்து 147 முன்னுரிமைத் தளங்களுக்கும் ஐ.அ.டொலர் 97 மில்லியன் மதிப்பிலான கள புலனாய்வுகள், விரிவான வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் மேற்பார்வை.்.நிர்மாண நடவடிக்கைகளின் முகாமைத்துவம் உட்பட தணிப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதே கூறின் நோக்கங்களாகும். எனினும், ஐ.அ.டொலர் 19.5 மில்லியன் பெறுமதியான 04 ஒப்பந்த பொதிகளின் கீழ் 27 தளங்களில் சிவில் பணிகள் தொகுக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், 2020 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5.2 மில்லியன் பெறுமதியான 02 ஒப்பந்த பணிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 14.3 மில்லியன் பெறுமதியான ஏனைய 02 ஒப்பந்த பணிகள் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தன. | ஏலவிற்பனை செயற்பாட்டில் முகங்கொடுக்கப்பட்ட மிகப்பிரதான சவால்களிலொன்றாக அமைச்சு பெறுகை குழுவினால் 1,2 மற்றும் 3 இன் ஏலவிற்பனை பொதிகளை ரத்து செய்தமையாகும். | காலதாமதத்தை தடுக்கவும் மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக உரிய காலத்தில் ஒப்பந்த பணிகள் பூர்த்தி செய்வதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ை) | கட்டம் 02 இன் கீழ் ஐ.அ.டொலர் 60 மில்லியன் பெறுமதியான 08 ஒப்பந்த பணிகளின் கீழ் 120 தளங்களின் மிகுதி சிவில் பணிகள் பொதியாக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் போது எவ்வித ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயற்திட்ட காலப்பகுதிக்குள் நிர்மாணப்பணிகளின் பூர்த்தியானது கேள்விக்குறியாக உள்ளது. | தணிப்பு நடவடிக்கைகளை வடிவமைக்கும் கட்டத்தின் கீழ் உள்ள பிரதான விடயமாக நிர்மாணத்தின் தொடக்கத்தில் நீண்ட தாமதம் காரணமாக (1,2 மற்றும் 3 பொதிகளின் மீள்ஏலவிற்பனை காரணமாக) மாற்றிய புவிசார்வியல் உள்ளே முக்கிய தளங்களை மீண்டும் செயற்படுத்துவதாகும். இது தளங்கள் கட்டம் ஐ இன் வடிவமைப்பு பணிகளை மீண்டும் மீண்டும் ஏற்படுத்தியது. மேற்கூறிய தாமதங்கள் காரணமாக பொதி 04 பட்டியலிடப்பட்ட படி வழங்கமுடியவில்லை. | காலதாமதத்தை தடுக்கவும் மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்காக உரிய காலத்தில் ஒப்பந்த பணிகள் பூர்த்தி செய்வதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | கூறு– 02 | கொள்கை, நியமங்கள் மற்றும் நிறுவகரீதியான இயலவை மேம்படுத்தல் என்பவற்றை இக்கூறு குறிக்கின்றது. இக்கூறின் கீழ் ஐ.அ.டொலர் 3.0 மில்லியன் பெறுமதியான 03 ஆலோசனை ஒப்பந்தங்கள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் விளம்பரப்படுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டு வரையிலும் அவ்வாலோசனை ஒப்பந்தங்கள் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது. ஏனைய கூறுகளை விட கூறு 02 பல்வேறு அக்கரையுடைய தரப்பினர்களுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். கொவிட் 19 மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி என்பவற்றின் விளைவாக அனைத்து அக்கரையுடைய தரப்பினர்களையும் பெறுகை குழுவையும் ஒன்று சேர்ப்பது சற்று சவாலானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் மண்சரிவு தணிப்பு பணிகளுக்காக 02 ஒப்பந்தங்களை ரூபா 860.41 மில்லியன் கிரயத்தில் 2020 நவம்பரில் வழங்கியதுடன் இவை 2021 செப்தெம்பர் மற்றும் நவம்பரில் பூர்த்தி செய்வதற்கு உடன்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தக்காரர்களின் மெதுவான செயன்முன்னேற்றம் காரணமாக ஒப்பந்த பணிகள் 2022 மார்ச் 03 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | பொதி 01 பிஎம்யூ இனால் 2022.02.20 இல் கையகப்படுத்தப்பட்டதுடன் நிறுத்திவைத்தலின் முதற்பகுதியும் விடுவிக்கப்பட்டது. விரைவில் பொதி-01 பொறியியலாளரிடமிருந்து நிறைவு செய்தலின் (இறுதி பட்டியல்) இறுதியறிக்கையொன்றை பெற உள்ளது. | ஒப்பந்தக்காரரின் நடவடிக்கைகளை பயனுறுதிமிக்க முறையில் கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | பெறப்பட்ட தகவலின் படி மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட மண்சரிவு தணிக்கை பணி ஒப்பந்தங்களின் ஒப்பந்த பெறுமதிகளான ரூபா 297.1 மில்லியன், ரூபா 314.15 மில்லியன், ரூபா 213.14 மில்லியன் மற்றும் ரூபா 303.99 மில்லியன் என்பவை முறையே 71 சதவீதம் ,11 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 30 சதவீதம் 2022 ஏப்ரல் 30 இல் உள்ளவாறாக நலிவான செயன்முன்னேற்றமாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் செயற்திட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்த பணிகள் பூர்த்தி செய்யப்படும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. | தளங்களில் காணப்படும் மூலப்பொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை தொடர்பாக பதிலளிக்கையில் ஒப்பந்தக்காரர்கள் சம்மந்தப்பட்ட பொதிகளுக்கான ஈஓடி க்கான அவர்களின் கோரிக்கை தொடர்பாக பொறியியலாளரிடம் தெரிவித்தனர். | -மேற்படி- |

**3.3 குறைபயன்பாடுடைய.'. பயன்படுத்தப்படாத வளங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட விரிவான கிரய மதிப்பீடானது ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து மொத்தம் ஐ.அ.டொலர் 35.5 மில்லியனும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து ரூபா 2,638 மில்லியன் நிதியாகவும் இருந்தது. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிதி பயன்பாட்டில் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி திறட்டிய கடனில் மொத்த செலவினம் ஐ.அ.டொலர் 3.94 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்க நிதியின் மொத்த செலவினம் ரூபா 436.04 மில்லியன் வரை அடையப்பட்டுள்ளன. | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது பல்வேறு காரணங்களினால் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டது. | செயற்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான பயன்பாட்டுடன் இலக்கினை ஒப்பீடு செய்யும் போது இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மொத்த தொகையில் பயன்படுத்தப்பட்ட மொத்த செலவினங்களின் சதவீதம் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 4.87 சதவீதமாகவும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து 7.3 சதவீதமாகவும் இருந்ததை அவதானிக்கப்பட்டது. மெதுவான செலவீடுகள் காரணமாக இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கட்டணமாக மொத்தம் ரூபா 89.7 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது | செயற்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பாதுகாப்பு மின்னழுத்திப் பெட்டிகள், 3எ லித்தியம் பேட்டரிக்கள், பிவிசி குழரய்கள், நீள்மை அளவி, தரவு பதிவு, 3மி நீள வழிகாட்டி குழாய் மற்றும் 50 மிமி விட்டம் மற்றும் அடையக்கூடிய கை கிரில் போன்ற 08 உருப்படிகள் ரூபா 93 மில்லியன் கிரயத்தில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக பயன்படுத்தப்படாமல் என்பிஆர்ஒ களஞ்சியத்தில் விளைவற்ற நிலையில் பேணப்பட்டுள்ளன என்பதுடன் அதன் சிறப்பு வாழ்நாள் கழிந்த பிறகு லித்தயம் பேட்டரிக்கள் போன்ற உருப்படி காலாவதியாகலாம். | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது. சொத்துக்களின் பாதுகாப்பு நடைமுறைகளை செயற்திட்டம் நெறிப்படுத்தும். | நிதி முகாமைத்துவ முறைமையின் ஒரு பகுதியாக வலுவான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 46 பதவியணியினரிற்கான பதவிநிலைகளில் செயற்திட்டமானது 16 பணியாளர்களை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளடக்கியுள்ளது. செயற்திட்ட பொறியியலாளர் ஒருவர், மண்சரிவு நிபுணர் ஒருவர், 03 புவி தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் 09 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்ற முக்கிய பதவிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ஏறக்குறைய 02 ஆண்டுகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் இது செயற்திட்ட நடவடிக்கைகளின் சுமூகமான தொழிற்பாடுகளை பாதித்தது. | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது. மிக விரைவாக மிகுதி பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுமூகமான செயற்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| செயற்திட்டத்துடன் செலவின மீளளித்தல் விகிதத்தின் உடன்பாடின்மை காரணமாக கடன் வழங்கும் நிறுவனத்தினால் ஐ.அ.டொலர் 64,668.75 வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர்களின் கருத்துரைகளுடன் இணங்கப்பட்டன .கடன் உடன்படிக்கையின் திருத்தத்திற்கு பிறகு நிறுத்தி வைத்த ஐ.அ.டொலர் 64,668.75 தொகையை ஏஐஐபி வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |